DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 240/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திரு.ஹரிராமச்சந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது குருவிகுளம் காவல்நிலையத்தல் தனிப்பிரிவு காவலராக பணிபுரிநது வருகிறேன். கடந்த 12.05.2018ம் தேதி 18.00 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது தங்கதுரைச்சி என்பவர் காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று காவல்நிலையக்குற்ற எண்.82/2018 ச/பி.457, 380 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் கற்பகராஜா அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் கற்பகராஜா என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

குருக்கள்பட்டியிலிருந்து சின்னகோவிலான்குளம் காவல்நிலையம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 5 கிமீ துாரத்தில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்திற்கு சுமார் 10 நிமிடங்களில் வந்துவிட முடியும் என்றால் சரிதான். புகார் மனுவில் திருட்டு ஏற்பட்டது சம்பந்தமாக புகார்தாரருக்கு எப்போது தெரியவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 12.05.2018 ம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு தெரியவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திருட்டு சம்பவம் தொடர்பாக புகார் மனுவானது காவல்நிலையத்தில் 12.05.2018 ம் தேதி மாலை 6 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் மனுவில் அடையாளம் தெரியாத ஒரு நபர் புகார்தாரரின் வீட்டில் இருந்த சூட்கேசை எடுத்துக்கொண்டு புகார்தாரரின் வீட்டின் பின்பக்கமாக ஓடிச்சென்றதாகவும், அந்த சூட்கேசில் புகார்தாரரின் அப்பாவின் பணம் ரூ.29000 இருந்ததாகவும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சூட்கேசில் ரூ.29000 பணத்தையும் சேர்த்து வாக்காளர் அடையாள அட்டை, 4 வேஷ்டி ஆகியவையும் இருந்ததாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் மனுவில் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டிருக்கும் தேதியான 11.05.2018 என்ற விபரம் அந்த புகார் மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளிவிபரக்கணக்கிற்காக புகார்தாரரிடமிருந்து பொய்யாக புகார் மனு பெறப்பட்டு, எதிரிக்கு எதிராக பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 12.05.2018 ம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் நடைபெற்ற திருட்டு சம்பவம் குறித்து அன்றைய தேதி மாலை6 மணிக்கு காலதாமதமாக காவல்நிலையத்தில் புகார்தாரர் புகார் மனு அளித்ததற்கான காரணம் புகார் மனுவிலும், முதல் தகவல் அறிக்கையிலும் துலங்குமா என்றால் துலங்காது.

**மறுவிசாரணை இல்லை.**